கல்லூரி மருத்துவ மனையிலே கண்டிப்பாக, அவசியமாக அந்த 'ஹோல் பாடி ஸ்கேனர்' வாங்கி வைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. எனவே தான் அந்தப் பகுதியிலே நான் வந்திருந்தபொழுது கூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இதுபோன்ற கோரிக்கைகளை என்னிடத்திலே தெரிவித்தபோது அரசாங்கத்திற்கு இருக்கிற நிதிப் பிரச்சினை ஒரு பக்கம் இருந்தாலும், அங்கேயிருக்கின்ற தொழிலாளர்களைப் பயன்படுத்தி, ஏதாவது ஒரு தொகையை அவர்கள் வசூல் செய்து அதற்காகக் கொடுத்தால் மீதித் தொகையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செய்வதற்குக் கொஞ்சம் சுலபமாக இருக்குமென்று சொல்லி, நானே கூட சில தொழிலதிபர்களோடு பேசினேன். எனவே அவர்களும் கூட அதைச் செய்வதற்கு ஒப்புதலைத் தந்தார்கள். அப்போதிருந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கூட தெரிவித்து விட்டு வந்தேன். இப்போது இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் அதைத் தெரிவிப்பதற்கு நான் ஏற்பாட்டைச் செய்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள், யாராக இருந்தாலும் இதிலே கொஞ்சம் அக்கறை எடுத்து ஒரு பகுதியை அவர்கள் வசூல் செய்து கொடுப்பார்களேயானால் மீதித் தொகையை அரசு ஏற்றுக் கொண்டு இந்தக் காரியத்தைச் செய்ய முடியும். அரசாங்கத்திற்குக் கடமை இருக்கிறது என்று சொன்னாலும் அவர்களும் அதிலே அக்கறை காட்டலாம் என்பதற்காகத்தான் நான் இங்கே இதைத் தெரிவிக்கிறேன். எனவே அந்த முயற்சியை எடுத்தால் கொஞ்சம் வேகமாக நாம் செய்வதற்கு வாய்ப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன். அதற்கான ஏற்பாட்டை அப்போது செய்ய வசதியாக இருக்கும். நம்முடைய சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே கூட ஸ்கேனர் வைப்பதற்காக நடவடிக்கை எடுத்த போது அரசாங்கத்திலே நிதி பிரச்னை ஏற்பட்டபோது கூட முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து கொடுத்தார்கள். எனவே பொது மக்களும் இதிலே பங்கு கொண்டால் நாம் இதைச் செய்வதற்கு சுலபமாக இருக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: வினா எண் 63, திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

63—

பெரணமல்லூரில் அரசு மருத்துவமனை ஒன்றினை அமைத்தல்

*19081—திரு. ஆ. கு. சீனிவாசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1993 அக்டோபர் 29]

(அ) பெரணமல்லூர் நகரில் அரசு மருத்துவமனை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பெரணமல்லூர் நகரில் இயங்கிய அரசு மருந்தகம் 1-6-87 முதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரணமல்லூர் தொகுதியில், தொகுதியின் தலைமை இடமாக உள்ள இடத்திற்கு அரசு மருத்துவ மனை அவசியம் என்று நான் கேட்ட கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் இடம் இல்லை என்றும் ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே உள்ளது என்றும் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் அந்தப் பகுதியில் 25 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு சென்று தான் வைத்திய சிகிச்சை பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்போது அங்கே அடிஷனல் பிரைமரி ஹெல்த் சென்டர் என்று இருப்பதிலே கூட போதிய கட்டிட வசதியும் இல்லை, முதலுதவி செய்யும் அளவுக்கு தான் அது இருக்கிறது. எனவே அரசு மருத்துவ மனையாக அதனை நியமித்து உள்நோயாளிகள் சிகிச்சை பெறும் அளவுக்கு அதை அரசு மருத்துவ மனையாக ஆக்க வேண்டும் என்று கேட்டேன். எனவே இதை அரசு மருத்துவ மனை யாக ஏற்பாடு செய்வதற்கு அரசு துறையிடமிருந்து செயற் குறிப்புகள் ஏதாகிலும் இருக்கிறதா என்று அறிய வேண்டி நான் கேட்டிருந்தேன். அதற்கு பதில் எதுவும் இல்லை இருப்பினும்

''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.''

என்று எப்படி பூமியை வெட்டும் போது பூமா தேவி வெட்டுகிறவர்களை கீழே தள்ளாமல் தாங்கிக் கொண்டு பொறுமையாக இருக்கிறதோ அதே போல (மணியடிக்கப் பெற்றது) மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் பூமா தேவியைப் போல........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங் எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரு வேண்டுகோள். த ள்வி நேரத்தில் நீங்கள் பிரசங்கம் செய்து கொண்டிருந் ால் நான் 20 கேள்விகளை ஒரு மணி நேரத்தில் முடிக்க முடிவது இல்லை. எனவே உறுப்பினர்களும் சுருக்கமாகக் கேள்வி கேட்க வேண்டும், அமைச்சர்களும் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும், என்ற நியதியைக் கடைப்பிடிக்கக் கேட்டுக் கொள்கிறேன்... ... கேள்வி கேளுங்கள்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : அந்தப் பகுதிக்கு ஒரு மருத்துவ மனையை உள் நோயாளிகளாக சிகிச்சை பெறும் அளவுக்கு அரசிடமிருந்து செயற் குறிப்பு ஏதாகிலும் இருக்கிறதா என்று மேலும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வரையில் செயற்குறிப்பு ஏதும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் இவ்வளவு பேசி இருக்கிற காரணத்தால் அது பற்றி துறையிடம் சொல்லி, தனியாக அந்த அதிகாரிகளை அனுப்பி நிச்சயமாக அது பற்றி ஆய்வு செய்யச் சொல்கிறேன் என்பதை மட்டும் உத்திரவாதமாகத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 64, திரு எம். பூராசாமி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்

64—

பூம்புகாரில் கலங்கரை விளக்கம்

* 19150— திரு. எம். வீராசாமி

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி பூம்புகாரில் ஒரு கலங்கரை விளக்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன். போக்கு வரத்துத் துறை அமைச்சர்:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை,